327—

சென்னைக்கு பால், தயிர், காய்கறி ஆகியவற்றை எடுத்துவர வசதி செய்தல்.

*** 9918 திரு. டி. சுதர்சனம் :**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகர சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து சென்னைக்கு பால், தயிர், காய்கறிகள் ஆகியவற்றை எடுத்து வருவதற்கு பேருந்துகளில் வசதி செய்து தரப்படுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏற்கனவே பல்லவன் போக்குவரத்துக் கழகத்தால் போதிய பேருந்து வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளில் வசதி செய்யப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். சென்னை நகருக்கு வெளி கிராமங்களிலிருந்து காய்கறிகள், பால் போன்றவற்றைக் கொண்டுவருவதற்கு தனியார் வாகனங்கள் தினசரி அமர்த்துகிறபோது ஒவ்வொரு நாளும் அவர்கள் வாடகையை உயர்த்திக் கேட்கிற காரணத்தால் அந்த வியாபாரிகள் பொருட்களின் விலையை உயர்த்திவிடுகிறார்கள். அதனால் பொது மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகள் மூலமாக போக்குவரத்து வசதிகளை குறிப்பாக பாலுக்கும், தயிருக்கும், காய்கறிக்கும், மற்ற அத்தியாவசியப் பொருட்களுக்கும் செய்து கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பரிசீலனையில் இது இருக்கிறது. சென்னை மாநகரத்திற்கு வெளி கிராமங்களிலிருந்து வருகிற பேருந்துகளில் சில இருக்கைகளை அகற்றிவிட்டு அந்த இடங்களில் தேவையான காய்கறி போன்றவைகளைக் கொண்டுவருவதற்கான பரிசீலனையை அரசு செய்து கொண்டிருக்கிறது.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பஸ்களில், கார்களில் இருப்பதைப் போல கேரியர்கள் வைத்து அதிலே காய்கறிகள், பழங்கள், இலைகள்

1993 ஏப்ரல் 13]

எல்லாம் கொண்டுவருகிறார்கள். அதுபோல நமது அரசாங்க பஸ்களிலும் இருக்கிறதா? அப்படி இல்லாவிட்டால் அப்படிச் செய்ய முன் வருவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பேருந்துகளில் அதை வைப்பதில்லை. புற நகர்ப் பேருந்துகளில் அது வைக்கப்பட்டிருக்கிறது. புறநகர்ப் பேருந்துகளில்தான் காய்கறிகள் போன்ற பொருட்கள் நகரங்களுக்கு எடுத்துவரப்படுகின்றன. தொலைதூரப் பேருந்துகளிலும் அந்த வசதி இருக்கிறது. பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைப் பொறுத்தவரையில் லக்கேஜ் கேரியர் தேவையில்லை என்பதாலும், பயணிகள் பயணம் செய்வதற்காகவே அந்தப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன என்பதாலும்தான் அதிலே லக்கேஜ் கேரியர்கள் பொருத்தப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபடி, பேருந்துகளில் பின்னால் இருக்கிற இரண்டு இருக்கைகளை அகற்றிவிட்டு அந்த இடத்தில் காலை நேரங்களில் பால் கேன்கள், காய்கறிகளைக் கொண்டுவர அனுமதிப்பது குறித்து அரசு பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது என்பதை முன்பே குறிப்பிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ.து. வரதராஜன்.

முற்பகல் 10.25

திரு. செ.து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து கிராமங்களுக்கு ஐஸ் கொண்டு போவதற்கு வேண்டிய வசதிகள் முன்பு பேருந்துகளில் செய்து கொடுக்கப்பட்டிருந்தது. தற்போது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் ஐஸ் ஏற்றிச் செல்வ தடை செய்யப்பட்டிருக்கிறது. எனவே மீண்டும் அந்தப் பேருந்துகளில் ஐஸ் எடுத்துச் செல்ல ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சென்னையிலிருந்து ஐஸ் எடுத்துச் செல்லும்போது அது தண்ணீராகக் கரைந்து போவதால், அது அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் நல்லமுறையில் அதைப் பேக் செய்து கொடுத்தார்களானால், அதை எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆ.கு. சீனிவாசன்.

திரு. ஆ.கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாய்ப்பைத் தந்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வாய்ப்புக் கொடுக்கத்தான் இருக்கிறேன்.

திரு. ஆ.கு. சீனிவாசன்: நான் கிராமப் பகுதியில் வசிக்கிறவன். ஆறறிவு படைத்த நமக்கெல்லாம் வைத்திய சிகிச்சை பெறுவதற்கு போக்குவரத்து வசதிகள் செய்து தருகிறார்கள். நாட்டிலே கால்நடைச் செல்வம் முக்கியமான செல்வம் என்று கூறி, நாட்டினுடைய பெருமையைக் கொண்டாடுகிறோம். ஆகையால் கிராமப்புறங்களில் கால்நடைகள் நோய்வாய்ப்பட்டு நடக்க முடியாமல் போகும்போது, அவை வைத்திய சிகிச்சை பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமலும், மருத்துவர்கள் கிராமங்களுக்கு வந்துபோக வாய்ப்பு இல்லாமலும் இருக்கிறது. ஆகவே போக்குவரத்து மூலம் நோய்வாய்ப்பட்ட கால்நடைகளை மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்வதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) வாகன வசதிகளை போக்குவரத்துத்துறை அமைச்சரவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறறிவு படைத்த மனிதர்களை ஏற்றிச் செல்வதற்குத் தேவையான பேருந்து வசதிகளை நாம் செய்து தர வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப் போல், நாயைக் கொண்டு சென்றால் அது கடிக்கும். யானையை ஏற்றிச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படும். வேண்டுமென்றே எங்கள் ஊரில் யானை இருக்கிறது, அது நோய்வாய்ப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதை எதிலே ஏற்றுவது? ஆகவேதான் இந்த இக்கட்டான சூழ்நிலை இருக்கிற காரணத்தால் 5 அறிவு உள்ள மிருகங்களை ஏற்றிச் செல்வதற்கு அனுமதிக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 328. திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

328—

அண்ணாநகர் மேற்கு டிப்போவிலிருந்து தலைமைச் செயலகத்திற்குப் பேருந்து.

***9935 – திரு. ஆர். பி. பரமசிவம்:**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணாநகர் மேற்கு டிப்போவிலிருந்து 7-சி சாதாரணக் கட்டணப் பேருந்து, திருமங்கலம் வழியாக காலை 9 மணிக்கும், மாலை 5-45 மணிக்கு தலைமைச் செயலகத்திலிருந்தும் இயக்க அரசு முன்வருமா?